RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s178

OPEN ACCESS

# ஆண்டாள் பிரியதர்ஷினியின் “தகனம்” புதினத்தில் இளையோர் உளப்பாங்கு

**அ. ஏஞ்சல் ராணி** [அ, *]

[அ] தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி- 626123, தமிழ்நாடு, இந்தியா

# Young People's Attitude in Andal Priyadarshini's Novel "Thakanam (Cremation)"

**A. Angel Rani** [a, *]

[a] Department of Tamil Studies, Sri Kaliswari College (Autonomous), Sivakasi-626123, Tamil Nadu, India

* Corresponding Author: angelrani21102009@gmail.com

Received: 19-04-2022
Revised: 08-10-2022
Accepted: 30-10-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

"Thakanam" is a novel that deals with the sufferings in the lives of the people who live in the cremating work. In this novel, both the young and the elderly are shown by the teacher as cremators. This article highlights the sufferings of young people who are less experienced among them. The sufferings that these young people face when they take up the cremating occupation in their lives are limitless. They hide their sufferings and show happy faces. They are seen to be personality-possessed. However, sometimes their minds get disheartened when they lose. As they move on to the next stage of life, they are unable to make the right decisions and are subject to mental struggle. This article is intended to illustrate all this from a psychological point of view.

**Keywords:** Thakanam Novel, Cremation work, Mental Struggle, Lifestyle.

## முன்னுரை

புதினம் என்பது அளவில் பெரிய படைப்பாகவும் அரிய படைப்பாகவும் திகழ்கின்றது. குழந்தைகள் முதல் முதியோர் வரை உள்ள கதாப்பாத்திரங்கள் இடம் பெறுகின்றனர். அவ்வகையில் வெட்டியான் தொழில் செய்து வாழும் மக்களின் வாழ்வில் ஏற்படும் துன்பங்களைக் கூறும் புதினம் “தகனம் “ஆகும் (Aantaal Piriyadharshini, 2005). இம்மக்கள், வாழ்வில் அடையும் துன்பங்களையும் அதனால் அம்மக்கள் எதிர் கொள்ளும் மனநிலைகளையும் உளவியல் பாங்கின் மூலம் ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## படைப்பும் படைப்பாளரும்

வாழ்ந்து வருகின்ற பெண் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தகுந்தவராக ஆண்டாள் பிரியதர்ஷினி காணப்படுகிறார். நெல்லை மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டையில் கவிஞர் நெல்லை கணபதிக்கும், புலவர் சுப்புலட்சுமிக்கும் மகளாகப் பிறந்தவர். கவிஞரின் வாரிசு ஆகையால் சிறந்த கவிஞராகவே தோற்றமளித்தார். இவர் கட்டுரைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள் என பல்வேறு வகையானப் படைப்புகளைப் படைத்து அளித்துக் கொண்டிருப்பவர். காசியூர் ரங்கம்மாள் விருது பெற்ற ‘தகனம்’ புதினம் இவர் படைப்புகளில் மிகவும் போற்றப்பட வேண்டிய

புதினமாகும். வெட்டியான் தொழில் புரியும் மக்களுடன் சென்று ஆசிரியர் தங்கி, அவர்களின் வாழ்வியலை நேரில் கண்ட பின்பே இப்படைப்பு உருவானது.

## உளவியல்

உளவியல் என்பது உள்ளத்தின் கோலங்களையும், கோணங்களையும், அதன் விளைவுகளையும் ஆராயும் ஓர் அறிவியலாகும். மேலை நாடுகளில் உளவியல் பற்றிய சிந்தனை மிக விரிவாகக் காணப்படுகிறது. மனிதனின் உள்ளத்தைப் பற்றிய பன்முக ஆய்வு அறிவியலே உளவியல் ஆகும். உளவியல் மனித உள்ளம், உடல், உணர்ச்சிகள், நடத்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதே "நடத்தை பற்றிய அறிவியல்" என்பர் (Kanchana, 2007).

ஆங்கிலத்தில் "சைக்காலஜி" (Psychology) என்னும் சொல் உளவியல் என்கிற தமிழ்ச் சொல்லிற்கு நேரானது. சைக்கி (Psycho) லோகஸ் (Logus) ஆகிய இரண்டு சொற்களின் கூட்டாகவே "சைக்காலஜி" வழங்கப்படுகிறது. "சைக்கி" ஆன்மாவைக் குறிக்கும் கிரேக்கச் சொல்" லோகஸ்" என்பது அறிவு என்ற பொருளில் வரும் மற்றொரு கிரேக்கச் சொல். ஆன்மாவை ஆயும் அறிவியல் (Science of the soul) என்பதே சைக்காலஜிக்குப் பொருள். இந்தச் சொல்லை முதன்முதலில் ருடோல்ஃப் ப்ஜியோக்கல் (Rudolf Geockle) பயன்படுத்தினார் என்பர் (Santhanam, 1987).

உள்ளத்தின் இயல்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து விளக்கும் அறிவியல் துறையினை 1960 ஆம் ஆண்டு வரையில் உளவியல் என்னும் பெயரால் சுட்டினர். அதன் பிறகு முதன்மையும், தலைமையும் கருதிநடத்தையைப் பற்றிய அறிவியலே உளவியல் எனப் போற்றும் வழக்கம் உண்டாகிறது.

தமிழ்ச் சொல்லகராதி "உளவு" என்பதற்கு இரகசியம், உட்காரியம், உட்கிடை என்றும், உளவு சொல்லல் என்பதற்கு உள்ளவைகளை அறிந்து சொல்லல் என்றும் பொருள் கூறுகின்றது (Kathiraiverpillai, 1998). இவற்றின் வாயிலாக மனிதனின் நடத்தையைப் பற்றியும் அவனது நடத்தைக்கான மறைந்திருக்கும் காரணத்தைப் பற்றியும் ஆராய்வதே உளவியல் ஆகும்.

## இளையோர்

குழந்தைப் பருவத்திலிருந்து உள்ளத்தாலும், உடலாலும் மாறுகின்ற நிலை அல்லது பருவம் இளையோர் பருவமாகும். "அடலசன்ஸ் "(Adolesence) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "வளர்தல்" அல்லது முதிர்ச்சியை நோக்கிய வளர்ச்சி என்பது பொருளாகும் (Saradhammal, 1989).

"காலத்தில் கல்வி பயிலாது நேரத்தை வீண் போக்கியவன், காலத்தில் பொருள் ஈட்டாது நேரத்தைப் போக்கியவன், தங்களது வாழ்க்கையை ஓர் அவதியாகவும் பெரும் சுமையாகவும் கண்டு நலிவுறுவர்" என்று இளைஞர் பருவம் குறித்து குறிப்பிடுகின்றார்" தகனம்" புதினத்தில், சின்னராசு, சின்னப்பொண்ணு, ராணி, சம்பத் ஆகியோர் இளமைப் பருவத்தினராய் இடம்பெறுகின்றனர் (HMR, 1991).

## ஆளுமை, ஆளுமைக் காரணிகள்

ஆளுமை என்பதற்கு ஆங்கிலத்தில் "பெர்ஸனாலிட்டி" (Personality) என்பார்கள். "ஆளுமை எனப்படுவது ஒருவனைப் பிறர் விரும்பவோ, வெறுக்கவோ செய்யும் அவனிடமுள்ள விவரிக்க இயலாத ஒரு பண்பு என்று சாதாரண மக்கள் கருதுகின்றனர். ஆளுமை எனப்படுவது ஒருவனிடம் காணப்படும் உடற்கவர்ச்சியின் அளவு என்றும் பலர் எண்ணுகின்றனர். பிறரைக் காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பிலோ, திறனிலோ மிகச் சிறந்து விளங்குபவனைச் சிறந்த ஆளுமையுடையவன் என்கிறோம் (Santhanam, 1987).

ஆளுமைக் காரணிகளில் உளவியல் காரணிகளான நுண்ணறிவு மற்றும் ஊக்கம் இரண்டும் தகனம் புதினத்திலுள்ள இளையோரிடம் காணப்படுகிறது.

## நுண்ணறிவு

குழந்தைகளும், மெல்லக் கற்பவர்களும் இவ்வுலகில் பிறந்து உயிர் வாழ்கின்றனர். ஆனால் அவர்களுடைய ஆளுமையில் தோன்றும் வித்தியாசத்திற்குக் காரணம் நுண்ணறிவே ஆகும் (Kohila Thangasamy, 1996).

"இந்த பணத்தைப் பட்டுவாடா பண்ணும் போதும், ஆரம்பத்தில் இறங்கிய சோற்றையும் வாங்கத் துடித்துச் சண்டை போட்டு குழப்பமாய் ரகளை பண்ணியவர்களை ஒழுங்கு படுத்திப் பொறுமையாய் நிற்க வைத்து சரிசெய்தது சின்னப்பொண்ணுதான்"

என்பதன் மூலம் வெட்டியான் தொழில் செய்யும் மக்கள் தங்குவதற்கு சரியான வீடு இல்லாமல் இருப்பதால் மழை வெள்ளம் வந்து வீடின்றி தவிக்கின்றனர். அரசாங்கம் வெள்ள நிவாரண நிதி வழங்குகிறது. கூட்டத்தில் எத்தனையோ பெரியவர்கள் இருப்பினும், பணத்தைப் பட்டுவாடா பண்ணும் போது வரிசையில் நின்று வாங்கினால் விரைவாக வாங்கலாம். அனைவரும் பணத்தைப் பெறலாம் என்ற நுண்ணறிவு சின்னப்பொண்ணுவிற்கு மட்டும் இருந்ததை ஆசிரியர் காட்டியுள்ளார்.

## ஊக்கம்

இந்த உலகில் ஊக்குவிக்கப்பட்டவர்கள், எதிலும் விரைவில் வெற்றி பெறுகிறார்கள். குறைந்த அளவில் ஊக்குவிக்கப்பட்டவர்கள், குறைந்த அளவில் அடைவு பெறுகிறார்கள். ஆகையால் ஆளுமையில் ஏற்படும் வித்தியாசத்திற்குக் காரணம் குறைந்த அளவிலுள்ள ஊக்கமேயாகும் (Kohila Thangasamy, 1996).

"மாமா தொழிலு நா பண்றேன் ஆம்பளை ஒன்னால முடியாதாங்காட்டியும்? எங்கூட ரெண்டு நா வா.... பொணம் எரிக்க சாம்பல் அள்ளன்னு கத்தாரேன். நெளிவு சுளிவு புரிஞ்சுட்டா கைல காசு"

என்று தான் விரும்பும் வேலை கிடைக்காமல் இருக்கும் சின்னராசுவை, சின்னப்பொண்ணு ஊக்குவிக்கிறாள். தம் குலத்தொழில் தனது மாமா வீட்டில் சின்னராசுவிற்குப் பின் தொலைந்து விடக் கூடாது என்றும் தனது மாமா, அத்தையின் நிலையினை நினைத்தும் சின்னப்பொண்ணு ஊக்கப்படுத்துகிறாள். இருப்பினும் சின்னப்பொண்ணுவின் ஊக்கத் தன்மையைப் புரிந்து கொள்ளாத சின்னராசு தன் குலத்தொழிலைச் செய்ய முனையவில்லை.

## உளச்சோர்வுக் கோளாறு

ஒவ்வொரு மனிதனும் ஏதாவதொரு செயலினால் பாதிக்கப்பட்டு உள்ளம் சோர்வடைவதுண்டு. உளவியலில் மிக முக்கியப் பங்கினை வகிப்பது உளச்சோர்வுக்கோளாறுகள் ஆகும். மனித வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதில் அவனுடைய மனநிலைக்குப் பெரும்பங்கு உண்டு. மன நிலைகள் பாதிக்கப்படும் பொழுது மனிதனின் வாழ்க்கையும் பலவகைகளில் பாதிப்புக்கு உள்ளாகின்றது.

## இழப்பில் ஏற்படும் உளச்சோர்வு

உளவியலின் தந்தையாகிய சிக்மண்ட் ஃபிராய்டு உளச்சோர்வு கோளாறுகள் பற்றிக் குறிப்பிடும் போது இழப்பை ஒரு காரணமாகச் சுட்டுகிறார். "நெருங்கிய ஒருவரது இழப்பு ஒரு மனிதனை உளச்சோர்வடையச் செய்யும். அப்படிப்பட்டவர்கள் இறந்தவரையோ அல்லது இழந்தவரையோ பற்றிய தம் விருப்பு வெறுப்புகளுக்கிடையே வருத்தம் அடைவதோடு தம்மைத் தனிமைப்படுத்திச் சென்று விட்டார் என அவர் மீது சினமும் அடைவார்கள்" என்று குறிப்பிடுகிறார் (HMR, 1991).

"மேளதாளத்தோடு உறவினர் கூட்டத்தோடு வந்திறங்கும் பிணங்களைத் தீமூட்டிப் புரட்டிப் போட்டு நெஞ்சுக்குழி வரை வேகவைத்துச் சாம்பல் சேர்த்துக் கொடுப்பவளுக்கு....

அம்மாக்காரியின் சாம்பல்...... அம்மாக்காரியின் எலும்பு என்றெல்லாம் எடுத்து அழ முடியாமல் போன இழப்பு"

தகனமிடும் தொழிலே வேண்டாமென்று சின்னப்பொண்ணு அப்பா விட்டுச் சென்றதும் அம்மா இருக்கின்றாள் என்று துணிவுடன் இருந்தாள். ஆனால் இப்பொழுதோ அம்மாவும் இல்லை. தனக்கு துணையாக யாருமே இல்லையே என்ற உளச்சோர்விற்கு சின்னப்பொண்ணு ஆளாவதை பிற மனிதர்கள் வாயிலாக ஆசிரியர் காட்டியுள்ளார்.

## உளப்போராட்டம

மனித மனதில் ஏதேனும் ஒன்றைப்பற்றி போராட்டங்கள் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கின்றன. அவற்றிலிருந்து விடுபட வேண்டுமென்று அவன் விரும்பினாலும் அவனால் அஃது இயலுவதில்லை. "ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான தேவைகள் (Needs) ஆசைகள் (Desires), உள்துடிப்புகள் (Impulse) ஆகியன ஒன்றோடொன்று மோதுவதால் உளப்போராட்டங்கள் உண்டாகின்றன. அவை ஒவ்வொரு மனிதனிடமும் அவனுக்கு உள்ளே நடைபெறும் போராட்டங்களாகும். ஆகையால் அவற்றை உளப்போராட்டங்கள் என்றும் பொருள் கூறலாம்" உளப்போராட்டங்களை உளவியலார் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கின்றனர் (HMR, 1991). அவை,

1. ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்டங்கள் (Approach - Approach conflicts)
2. தவிர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Avoidance - Avoidance conflicts)
3. ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டங்கள்Approach - Avoidance Conflicts)
4. இரட்டை ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டங்கள்Double Approach - Avoidance Conflicts

இவற்றுள் முதல் மூன்று வகைகளை "தகனம்" புதினத்தில் பொருத்திப் பார்க்கலாம்.

## ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்டம்

இந்த வகை உளப்போராட்டம் மனிதர்கள் அனைவருக்குமே ஏதோ ஒரு சூழலில் தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படுகின்றன. "இந்த வகை உளப்போராட்டத்தில் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வெவ்வேறு இலக்குகளினால் ஈர்க்கப்படுவான். அவன் இரண்டோ, இரண்டிற்கு மேற்பட்டோ ஆசைகளை அல்லது விருப்பங்களை வைத்திருந்து அவற்றுள் ஒன்றை நிறைவேற்ற முயன்றால் மற்றவற்றை அவன் இழக்க நேரிடும். அதனால் எதை அணுகுவது, எதை விடுவிப்பது என்ற குழப்பம் ஏற்படும்") என்று உளவியலார் குறிப்பிடுகின்றனர்.

"என்னத்தப் பண்ண? மூட்டை தூக்கவா? டேபிளு தொடைக்கலாமா? சொடக்குப் போட்டுச் சுண்டிக் கூப்டாலும் பரவாயில்லைன்னு பிளாஸ்க் தூக்கிப் போற பியுன் வேலைக்குப் போலாமா? எனக்கு எத்தினி சொக்கா வாங்கிக் குடுத்திருக்கு தாத்தா. அதுக்கொரு வேட்டி வாங்க வழி இல்லையே ராணிக்கு வேற சபைல ஏதாச்சும் பண்ணனும் என்னத்த ஒழைக்க? எப்படி சம்பாதிக்க? புரியவில்லை சின்னராசுக்கு"

என்பதன் மூலம் தகனமிடும் தனது இனத்தாரின் தொழிலைச் செய்யவே மாட்டேன் என்று கங்கணம் கட்டி ஆடக்கொண்டிருக்கும் சின்னராசுவின் மனம் வேலையில்லா திண்டாட்டத்தின் காரணமாக ஏற்பட்ட வறுமை, குடும்பத்திலுள்ளோர் மீது கொண்ட பாசம் இவற்றின் காரணமாக விருப்பமற்ற வேலையில் ஈடுபடுவதா, வேண்டாமா என்ற உளப்போராட்டத்திற்கு ஆளாவதை உணரலாம் (Aantaal Piriyadharshini, 2005).

## தவிர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம்

வாழ்வின் பிடிமானங்களை இழந்து வாழ்வினையே வெறுத்துத் தற்கொலை செய்து கொள்ள நினைப்பவர்களின் உளப்போராட்டங்களை இது குறிக்கிறது.

"இப்போராட்ட நிலையில் இருக்கும் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வழிகளுள் ஏதேனும் ஒன்றை எதிர்கொண்டே ஆகவேண்டும். ஆனால் அவன் அனைத்து வழிகளையும் வெறுத்துத் தவிர்க்க நினைத்தாலும் ஒன்றை அவன் கட்டாயமாகத் தேர்ந்தெடுத்து ஆக வேண்டும்." (HMR, 1991)

> "சாக்கு போக்குச் சொல்லி எல்லாரும் கலைந்து போனாலும் கூட சின்னப்பொண்ணுக்கு மனது ஆறவில்லைதான். ஏதோ நெருடல் ஏதோ ஒரு விலகல் தெரிந்தது சின்னராசுவிடம். அம்மாக்காரி......... கைவிட்டு நழுவிப் போன துக்கத்தை விடவும், அவனின் விட்டேத்தியான பேச்சும், நடவடிக்கையும் அதிக வருத்தமாயிருந்தது அவளுக்கு"

என்பதன் மூலம் சின்னராசு தன்னை ஒரு பொருட்டாக நினைக்காமல் இருப்பதை உணர்ந்த சின்னப்பொண்ணு அம்மாவின் இறப்பு எண்ணத்தை தவிர்ப்பதா அல்லது சின்னராசுவின் செயலை தவிர்ப்பதா என்ற உளப்போராட்டத்திற்கு ஆளாகிறாள். ஆனால் சின்னப்பொண்ணு இரண்டையும் விடுத்து எப்பொழுதும் போல் வேலைக்குச் செல்வதை ஆசிரியர் காட்டுகிறார்.

## ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டம்

நன்மையை மட்டும் விரும்புவது மனிதர்களின் இயல்பாகும். நன்மையை மட்டும் விரும்பும் மனதில் நன்மை, தீமை ஆகிய இரண்டும் விளையும் போது உளப்போராட்டம் நிகழ்கின்றது, "மனிதன் தான் ஒரு குறிக்கோளைக் கொண்டு அதை அடைவதால் தனக்கு நன்மை, தீமை இரண்டும் விளையும் நிலையில் இருந்தால் அவனுள் இவ்உளப்போராட்டம் நடக்கும்" (HMR, 1991).

> "இன்னங்கொங்ச நாளு பளகிக்க நம்ம பொண்ணையே.... கட்டி வச்சடுறேன். அவரின் மகளையா? பார்த்திருக்கிறான். தைராய்டு பிரச்சினையால் உடம்பு மதமதவென்று சின்னயானைக் குட்டி மாதிரி பெருத்திருக்கும் அவள் பக்கத்தில் சின்னராசு அவளின் ஒரு கை சைஸீக்குத்தான் வருவான். அவளையா?"

என்பதன் மூலம் அரசியல்வாதியின் மகளைத் திருமணம் செய்தால் செல்வாக்காக வாழலாம். ஆனால் சின்னப்பொண்ணுவை திருமணம் செய்தால் செல்வாக்காக வாழமுடியாது. எனவே சின்னராசு எதை நாடுவது, எதைத் தவிர்ப்பது என்ற உளப்போராட்டத்திற்கு ஆளாகின்றான்.

## பதிலீடு

பதிலீடு அல்லது மடைமாற்றம் என்பதை சிக்மண்ட் ஃபிராய்டு உருமாற்றம் என்று குறிப்பிடுகின்றார். மனிதன் ஒருவன் தன்னிடத்திலே ஒரு குறைபாடு இருப்பதாக உணர்ந்து அதனைப் போக்கிக் கொள்ள முயல்கின்றான். அது முடியாத போது அதற்குப் பதிலாக வேறொரு புதிய ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள முயல்கின்றான். அதனைத் தான் பதிலீடு என்று கூறுவர் (HMR, 1991).

"அரசியல்ல சட்டுனு ஸெட்டிலாயிடனும் சின்ராசு...... அப்புறம் நா ஒதுங்கிட்டு உன்னை ஏறக்கி விடறேன். மருமவனா நீயும் மருவாதியா அரசியல் பண்ணலாம் சரியா?"

என்பதன் மூலம், சின்னராசு, பல முறை தன் ஊறவினர் கூறியும் தம் குலத்தொழிலைச் செய்யாமல் இருந்திருக்கின்றான். அதற்குப் பதிலாக அரசியலில் ஈடுபட்டுள்ளதை அரசியல்வாதிகள் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

## உள்ளன்பு

மனிதர்கள் ஒவ்வொருவரும் உள்ளன்போடு இருந்தாலே அவர்களுக்கு இறையன்பு கிட்டும். பசித்தவர்களுக்கு உணவிடுதலை விட சிறந்த அன்பு வேறொன்றுமில்லை. "மனிதர்கள் ஒருவருக்கொருவர் உள்ளன்பு உடையவராக வாழுதல் ஒன்றே இறைவனிடத்தில் மனிதர்களை நெருங்கிய உணர்வு கொள்ளச் செய்யும் பண்பாகும்" (HMR, 1991).

"இனிம அத்தைக்காரி ஒத்தாரசைக்கு யாருமில்லாத என்ன பண்ணுவா? தனக்குத்தான் வாய்விட்டு பேசியபடியே சுருக்குப்பையை அவிழ்த்துச் சில்லறையை எண்ணினாள்"

என்பதன் மூலம் தன் குடும்பத்தின் மீது கோபமாகவும், தன் மேல் சிறிதளவும் அன்பு இல்லாமலும் இருக்கும் முனியம்மாவின் மீது இரக்கம் கொண்ட சின்னப்பொண்ணுவின் உள்ளன்பு நன்கு புலனாகிறது,

## சார்புணர்ச்சி

ஒருவன் துன்புறும் போது, தானும் துன்புறும் ஒருவனைச் சார்புணர்ச்சி நிறைந்தவன் எனலாம். "மற்றவர்கள் அவதியுற ஒருவன் அவர்களுக்காக வருந்துவது சார்புணர்ச்சி எனப்படும்" (Sanmugam, 1980).

"அவனைத் திருமபித் திரும்பிப் பார்த்துச் சிதைநோக்கி நடந்தாள் சின்னப்பொண்ணு. கொஞ்சம் வரட்டியும், விறகையும் இறுக்கமாய் அடுக்கினாள். மண்ணெண்ணெய் தெளித்தாள். கூடவே விழுந்தது அவளின் கண்ணீரும்"

என்பதன் மூலம் பிணத்திலிருந்து தெளித்த கண்ணாடித்துண்டு சம்பத்தின் கண்ணில் குத்தி அவதியுறுவதைக் கண்ட சின்னப்பொண்ணு கண்ணீர் வடித்து வருந்துகிறாள். இதனால் அவளுடைய சார்புணர்ச்சியை அறிய முடிகிறது,

## இருமுகப்போக்கு

அம்பிவாலென்ஸ் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இருமுகப்போக்கு என்று பெயர். "ஒருவர் மீது ஒரே நேரத்தில் அன்பும், வெறுப்பும் கலந்த ஒருவித உணர்வைக் காட்டுவது. இந்த இரு உணர்ச்சிகளையும், வெளிப்படையாகக் காட்டாமல் உள்ளுணர்விலேயே அடக்கிக் கொள்ளும் குணம்" இருமுகப்போக்கு ஆகும்.

"சமைஞ்சு ஆறுமாசம் கூட முழுசாக் கழியல்ல இந்தக் குட்டி போடற ஆட்டத்தைப் பாரேன். அப்பங்காரன்.... உடம்பு ஏலாம இருக்கான் நடமாட்டம் கம்மி.... அண்ணங்காரனுக்கு அவன் கவலையே பெரிய கவலை. அதான் இந்த குட்டி ஆட்டம் போடுது"

என்று சின்னப்பொண்ணு புலம்புவதன் மூலம், ராணியின் மீது அவள் கொண்டுள்ள அன்பும், ராணி செய்யும் தவற்றால் ஏற்பட்ட வெறுப்பும் ஒருசேர வருவதை வெளியில் காட்டாமல் உள்ளுக்குள்ளேயே வைத்துக்கொள்ளும் இருமுகப்போக்கு நன்கு புலனாகிறது.

## முடிவுரை

இளையோரின் பண்புகள் அவர்களின் மனவுணர்விற்கு ஏற்ப மாற்றம் அடைகின்றன. இம்மாற்றங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப அமைகின்றன. சமுதாயத்தில் தாழ்நிலையில் வாழும் இளையோர்கள், இழப்பினால் ஏற்படும் உளச்சோர்வையும் வெளிக்காட்டுவதில்லை. இளையோர் தங்கள் வாழ்க்கைக்குரிய தேவைகளைச் சூழ்நிலைக்கு ஏற்பத் தேர்வு செய்யும் பொழுது உளப்போராட்டத்திற்கு ஆளாகின்றனர். இளையோர் தனது எதிர்காலக் கனவை அடைய பதிலீட்டில் ஈடுபடுகின்றனர். தகனமிடும் இளையோர் உள்ளன்பின் விளைவால் சார்புணர்ச்சியும் இருமுகப்போக்கும் அடைகின்றனர்.

## References

Aantaal Piriyadharshini, (2005) Thaganam, New century Book house, Chennai, India.

H.M.R., (1991) Idhaiyam or Vilai Nilam, Girija Pathippagam, Thanjavur, India.

Kalaimani, N.V. (2001) Santhi Nilaiyam, Chennai, India.

Kanchana, R. (2007) Ilakkiyamum Ulaviyalum, International Institute of Tamil Studies, Chennai, India

Kathiraiverpillai, N. (1998) Tamil Sollagaraathi, International Institute of Tamil Studies, Chennai, India.

Kohila Thangasamy, (1996) Manitha Valarchi Ulaviyal, Vishunupriya Pathippagam, Madurai, India.

Sanmugam, T.A. (1980) Kalvi Ulaviyal, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India

Santhanam, S. (1987) Kalvin Ulaviyal adipadaikal, Sandha Pathippagam, Chennai, India.

Saradhammal, S. (1989) Ilakkiyamum Ulappaguppaivum, Harikaran Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License